மேலும், இதுகுறித்து தமிழ்நாடு அரசு நவம்பர் 2008–இல் உச்ச நீதிமன்றத்தில் ஓர் இடைக்கால மனுவினைத் தாக்கல் செய்துள்ளது. இதில் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மேல்முறையீட்டு மனுக்கள் மற்றும் காவிரி நடுவர்மன்றத்தின் முன் நிலுவையிலுள்ள விளக்கம் கோரும் மனுக்கள் ஆகியன முடிவுக்கு வரும்வரையில், கர்நாடக அரசு சிவசமுத்திரம் மற்றும் மேகதாது புனல் மின் திட்டங்களைச் செயல்படுத்தக்கூடாது என்றும்; தேசிய நீர் மின் கழகமோ அல்லது மத்திய அரசின் மற்ற தகுந்த மின் உற்பத்தி நிறுவனமோ இந்த 4 புனல் மின் திட்டங்களையும் செயல்படுத்த வேண்டும் என்றும் தமிழ்நாடு கோரிக்கை வைத்துள்ளது. இவ்வழக்கு நிலுவையில் உள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் கர்நாடகத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் கர்நாடக அரசு தமிழ்நாட்டின் இசைவைப் பெறாமல் புதிய அணையைக் கட்ட இயலாது. அவ்வாறு கர்நாடக அரசு முயற்சிக்குமேயானால் தமிழகம் அதனை எந்தச் சூழ்நிலையிலும் அனுமதிக்காது என்பதைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. வரவு–செலவுத் திட்டம், 2012–2013, பொது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2012–2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

***திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதத்தில் நான் பங்கேற்க அனுமதி அளித்த எங்கள் தலைவர் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களை நன்றியோடு வணங்கி, என்னுடைய விவாதத்தினை இந்த அவையில் தொடங்குகின்றேன்.

முற்பகல் 11–50

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையினைச் சமர்ப்பித்து அதன் கடைசி பக்கத்திலே மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து வருகின்ற மேலான கருத்துகளையும், ஆக்கப்பூர்வமான விமர்சனங்களையும், சமமாகவே எடுத்துக்கொள்வோம் என்று உறுதிபடத் தெரிவித்ததற்கிணங்க, தே.மு.தி.க. உறுப்பினர் என்ற முறையில் நிதிநிலை அறிக்கையில் உள்ள குறைகளையும், மக்களின் தேவைகளையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடலூர், விழுப்புரம் மாவட்டத்தில் 'தானே புயல்' நடத்திய கோரத் தாண்டவத்திற்கு இந்த அரசு அறிவித்த நிவாரண உதவிகள் போதுமானதாக இல்லை. பாதிக்கப்பட்ட மக்கள் இந்த